## முத்தமிழறிஞர் கலைஞரின் தனி பணியாளர் - நினைவில் வாழும்

# கரு. செயல்மணி இல்லத் திருமண விழா! அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில்!

### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் - முரசொலி செல்வம் - தயாநிதி மாறன் எம்.பி. - மு.க.தமிழரசு வாழ்த்துரை!

சென்னை, ஆக.20-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தனி பணியாளர் நினைவில் வாழும் கரு.செயல்மணி - திருமதி செ.செல்வமணி ஆகியோரின் மகள் வழிப் பெயர்த்தியும், சிவகங்கை - சிங்கம்புணரி நினைவில் வாழும் சே. சேவற் கொடியோன் - சே. தெய்வானை ஆகியோரின் மகன் வழிப் பெயர்த்தியும். சே. கோவலன் - அஞ்சுகம் கோவலன் ஆகியோரின் புதல்வியுமான டாக்டர் கண்மணி கோவலனுக்கும், அவினாசி வேலாயுதம் பாளையம் சிட்டுச்சாமி (எ) எல்.கிருஷ்ணசாமி - தனலட்சுமி ஆகியோரின் புதல்வர் பொறியாளர் கே.வருண் குமாருக்கும் மணவிழா நாளை (21.8.2023-திங்கள் கிழமை) காலை 9.15 மணியளவில் சென்னை, அண்ணா நகர் டி.கே.மஹாலில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாசியுடன் நடைபெறுகிறது.



இம்மணவிழாவை கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.

சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு முன்னிலை வகிக்கிறார்.

இம்மணவிழாவில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், முரசொலி செல்வம், தயாநிதி மாறன் எம்.பி., மு.க. தமிழரசு, எம்.கே. மோகன் எம்.எல்.ஏ., டி.கே.எஸ். இளங்கோவன், இராம அருணகிரி, பூச்சி எஸ். முருகன், பரமசிவம், எம்.ஆர்.பி.எம். காமராஜ், ஐ.சி.எப். சங்கர், புஜ்ஜி எஸ்.மோகன், உள்ளிட்ட கழக முன்னணியினர், கழக நிர்வாகிகள் பலர் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

கே.கோவலன், அஞ்சுகம் கோவலன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

---

## ஒன்றிய பா.ஜ.க. அரசின்

# 7 திட்டங்களில் மெகா முறைகேடு!

புதுடெல்லி, ஆக. 20-

மோடி அரசின் மெகா ஊழல் களை அம்பலப்படுத்தியுள்ள மத்திய தணிக்கைக் குழுவின் அறிக்கை நாடு முழுவதும் மீண்டும் சர்ச்சைப் புயலை உருவாக்கியுள்ளது. ஏழு திட்டங்களில் முறைகேடுகள் நடந் திருப்பதாக மத்திய கணக்குத் தணிக் கைக் குழு விரிவாக சுட்டிக்காட்டி யிருக்கிறது.

**1.ஒன்றிய அரசின் பாரத் மாலா திட்டத்தில், ஏலம் விடுதலில் முறைகேடு நடந்திருக்கிறது.**

**2.துவாரகா விரைவுப்பாதை கட்டுமானத்தில், ஒரு கிலோ மீட்டருக்கு திட்டச்செலவான 18 கோடி ரூபாயில் இருந்து 250 கோடி ரூபாய் செலவழித்தது ஏன்?**

**3.இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் சுங்கச்சாவடிகளில் விதிமுறைகளை மீறி பயணிகளிடம் 132 கோடி ரூபாய் வசூல் செய்யப்பட்டுள்ளது.**

**4.ஆயுஷ்மான் பாரத் திட்டத்தில் ஏழரை லட்சம் பயனாளிகளின் விவரங்கள், ஒரே தொலைபேசி எண்ணில் இணைக்கப்பட்டுள்ளது.**

**5.அயோத்யா மேம்பாட்டுத் திட்டத்தில் ஒப்பந்ததாரர்களுக்குத் தேவையற்ற சலுகைகள் வழங்கப்பட்டுள்ளது.**

**6.கிராமப்புற மேம்பாட்டு அமைச்சகத்தின் ஓய்வூதியத் திட்டத்துக்கான பணம், ஒன்றிய அரசின் விளம்பரங்களுக்காக மடை மாற்றப்பட்டுள்ளது.**

**7.எச்ஏஎல் விமான எஞ்சின் வடிவமைப்பில் தவறு செய்த வகையில் 154 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.**

### இரண்டு மடங்காக நிதி ஒதுக்கப்பட்டது எப்படி?

நாடு முழுவதும் உள்ள சாலைகள் நெடுஞ்சாலைகள் விரைவுச் சாலைகளை இணைக்கும் பாரத் மாலா திட்டத்தின் முதல் கட்டத்தில் 34,800 கிலோ மீட்டர் சாலை அமைக்க, மத்திய அமைச்சரவை 5,35,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தது. 26,316 கிலோ மீட்டர் சாலை அமைக்க 8,46,588 கோடி ரூபாய் மதிப்பில் ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன. அமைச்சரவையின் ஒப்புதல்படி பார்த்தால் ஒரு கிலோ மீட்டர் சாலை அமைக்க 15.37 கோடி ரூபாய் செலவாகும் நிலையில், வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தத்தின்படி, செலவு ரூ.32.17 கோடியாக அதிகரித்துள்ளது. அதாவது, முறைகேடாக இத்திட்டத்தின் நிதி இரண்டு மடங்காக உயர்த்தப் பட்டுள்ளது.

### “ஒரு கிலோமீட்டருக்கு ரூ.250 கோடியா?”

நாட்டின் முதல் எட்டு வழி விரைவு சாலையை சுமார் 9000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்ட திட்டமிடப்பட்டது. ஹரியானாவில் 18.9 கிலோ மீட்டர் தூரத்திற்கும் தில்லியில் 10.1 கிலோ மீட்டர் தூரத்துக்குமான இத்திட்டத் தில் ஒரு கிலோ மீட்டர் சாலையை அமைக்க ரூ.18 கோடி ஆகும் என்று முடிவு செய்திருந்த நிலையில், தற்போது அது ஒரு கிலோ மீட்டருக்கு 250 கோடி ரூபாய் என அதி கரிக்கப்பட்டுள்ளது. அதாவது, 14 மடங்கு மதிப்பீடு உயர்த்தப்பட்டுள்ளது.

### சுங்கச்சாவடிகளில் கூடுதல் கட்டணம்

ஐந்து சுங்கச்சாவடிகளில் வாகன ஓட்டிகளிடம் இருந்து வசூல் செய்யப்பட்ட தொகையை ஆய்வு செய்தபோது அவை ரூ.154 கோடி அளவிற்கு அதிக தொகையை வசூல் செய்திருப்பது தெரியவந்திருப்பதாக புகார்கள் உறுதி செய்யப் பட்டுள்ளன.

### ஆயுஷ்மான் பாரத் ஊழல்!

2018ஆம் ஆண்டு பிரதமர் நரேந்திர மோடி அறிமுகப்படுத்திய ஒன்றிய அரசின் மருத்துவக் காப்பீடு திட்டம் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தில் ஆகஸ்ட் ஒன்றாம் தேதி நிலவரப்படி 24.3 கோடி ஆயுஷ்மான் பாரத் மருத்துவக் காப்பீடு அட்டைகள் உருவாக்கப்பட்டு இருப்பதாக தெரி விக்கப் பட்டு உள்ளது. இதில் 7.5 லட்சம் மருத்துவக் காப்பீடு அட்டைகள் ஒரே செல் போன் எண்ணைக் கொண்டு பதிவு செய்யப்பட்டு இருப்பதாக சி.ஏ.ஜி. அறிக்கை தெரிவிக்கிறது. சிகிச்சையின் போது இறந்த 88,670 நபர்களுக்கு புதிதாக சிகிச்சை பார்த்ததாக காப்பீடு பெறப்பட்டிருப்பதாகவும் இதில் பல்லாயிரம் கோடி ரூபாய் முறைகேடு நடந்திருப்பதாகவும் சி.ஏ.ஜி. அறிக்கை உறுதி செய்கிறது.

### அயோத்யா மேம்பாடு திட்ட ஊழல்

அயோத்தியில் ராமர் கோவில் கட்டப்பட்டு வரும் நிலையில், அயோத்யா மேம்பாடு திட்டத்தில், ஒப்பந்ததாரர்களுக்கு பணி கொடுக்கும் போது குறிப்பிட்ட அளவு உத்தரவாதத் தொகையை செலுத்தி இருக்க வேண்டும். 62.17 கோடி ரூபாய்க்கு ஒப்பந்தம் எடுத்த ஒரு ஒப்பந்த தாரர் உத்தரவாத தொகையாக ரூ.3.11 கோடி செலுத்த வேண்டிய நிலையில் வெறும் ரூ.1.86 கோடி மட்டுமே செலுத்தியுள்ளார். ஆனால் அவருக்கு ஒப்பந்தங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில் பார்த்தால் ஒப்பந்ததாரர்கள் 19.73 கோடி ரூபாய் அளவிற்கு அதிக லாபம் அடைந்திருப்பதாகவும் இந்த திட்டத்தை செயல்படுத்தியதால் சுமார் ரூ.8.22 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

### மடைமாற்றப்பட்ட ஓய்வூதிய நிதி

கிராமப்புற மேம்பாட்டு அமைச்ச கத்தின் ஓய்வூதிய திட்டத்துக்கான நிதி, விளம்பரத்துக்காக செல விடப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது. 2017 ஆம் ஆண்டு இத் திட்ட த்தை 19 மாநிலங்களில் விளம்பரப் படுத்த தலா 5 விளம்பரப்பலகைகள் வைக்க 2.44 கோடி ரூபாய் ஓய்வூதிய திட்டநிதியைக் கொண்டு செலவு செய்யப் பட்டுள்ளது.

### ஹெச்.ஏ.எல். விமான எஞ்சின் வடிவமைப்பு ஊழல்

ஹெச்ஏஎல் என அழைக்கப்படும் இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறு வனத்தில், தவறான திட்ட வடி வமைப்பு கோளாறுகள், உற்பத்தி யில் தாமதம் உள்ளிட்ட பல்வேறு கார ணங்களால் 2022 மார்ச் நிலவரப்படி சுமார் ரூ.159.23 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருப்பதாக சி.ஏ.ஜி. அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்

---

## குஜராத் மக்களிடம் 9 நாளில் ரூ.1400 கோடி மோசடி

# மோடி, அமித்ஷா என்ன செய்தனர்? சீனாவைச் சேர்ந்தவரை தப்ப விட்டது ஏன்?

### காங்கிரஸ் கட்சி சரமாரி கேள்வி

புதுடெல்லி, 20-

குஜராத் மக்களிடம் ஆன்லைன் ஆப் மூலம் சீனாவை சேர்ந்தவர் 9 நாளில் ரூ.1400 கோடி மோசடி செய்த போது மோடியும், அமித்ஷாவும் என்ன செய்தனர் என்று காங்கிரஸ் கேள்வி எழுப்பி உள்ளது. குஜராத்தில் 1200 பேரை ஆன்லைன் பந்தய செயலி மூலம் சீனாவை சேர்ந்த வூ உயன்பே ஏமாற்றி ரூ.1400 கோடி மோசடி செய்துள்ளார். வெறும் 9 நாளில் அவர் இந்த மோசடியை செய்து விட்டு நாட்டை விட்டு தப்பி சீனாவுக்கு சென்று விட்டார். இதுபற்றி இப்போது போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகிறார்கள். இந்த மோசடி குறித்து காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் பவன் கேரா நேற்று முன்தினம் கூறியதாவது:

எதிர்க்கட்சித் தலைவர்களை குறிவைக்க அமலாக்க இயக்குநரகம், சிபிஐ மற்றும் தீவிர மோசடி விசாரணை அலுவலகம் (எஸ்எப்ஐஓ) போன்ற விசாரணை அமைப்புகளை ஒன்றிய அரசு பயன்படுத்துகிறது. ஆனால் இந்தியர்களை கொள்ளையடித்துநாட்டை விட்டு வெளியேறிய சீன மோசடியாளர்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. சீனாவை சேர்ந்த வூ உயன்பே கால்பந்து பந்தய செயலியைப் பயன்படுத்தி குஜராத்தில் 1,200 பேரிடம் வெறும் ஒன்பது நாட்களில் ரூ.1,400 கோடியை ஏமாற்றி நாட்டை விட்டு ஓடிவிட்டார். பிரதமர் மோடியோ அல்லது உள்துறைஅமைச்சர்அமித்ஷாவோ அவரை தடுக்க முடியாது.

இந்த மோசடி தொடர்பாக ஒன்றிய அரசு வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும். விஜய் மல்லையா, லலித் மோடி, நீரவ் மோடி, மெஹுல் சோக்ஸி மற்றும் தற்போது சீனாவை சேர்ந்தவர் என்று அடுத்தடுத்து மக்களை கொள்ளையடித்தவர்கள் தப்பி ஓடியுள்ளார்கள். மோடி அரசு பொதுப் பணத்தின் பாதுகாவலர் அல்ல. மாறாக கொள்ளையடித்து, வெளிநாடுகளுக்கு பறந்து செல்ல விரும்பும் மோசடி நபர்களுக்கு உதவும் ஒரு பயண நிறுவனம் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. சீனா நபரின் மோசடி குறித்து 2022 டிசம்பர் வரை குஜராத் காவல்துறைக்கு 1,088 புகார்கள் வந்துள்ளன.

மேலும் ஹெல்ப்லைன் மூலம் 3,600 க்கும் மேற்பட்ட புகார்கள் பெறப்பட்டுள்ளன. ஆனால் மோடி அரசு சீன செயலிகளை தடைசெய்வது மட்டும் செய்யாது. விசாரணை அமைப்புகளால் ஏன் சீன நாட்டவரை இந்தியாவிலிருந்து தப்பிச் செல்வதற்கு முன் கைது செய்ய முடியவில்லை அல்லது அவரது டிஜிட்டல் மோசடியை கண்டுபிடிக்க முடியவில்லை? மோடி அரசு ஏன் தூங்கியது? அரசியல் எதிரிகளுக்கு எதிராக மட்டும் விசாரணை அமைப்புகள் ஏன் ஆயுதம் ஏந்துகின்றன? அது மட்டும் தான் பிரதமர் மோடி மற்றும் அமித்ஷாவின் செயல் திட்டமா?

---

# ம.பி.பா.ஜ ஆட்சியில் ரூ.2.70 லட்சம் கோடி ஊழல்!

### 18 ஆண்டு பட்டியலை வெளியிட்டது காங்கிரஸ்

போபால், ஆக.20-

மபி பா.ஜ ஆட்சியில் கடந்த 18 ஆண்டுகளில் ரூ.2.70 லட்சம் கோடி ஊழல் நடந்ததாக கூறி காங்கிரஸ் கட்சி பட்டியல் வெளியிட்டுள்ளது. மத்திய பிரதேச மாநிலத்தில் பா.ஜ ஆட்சி நடக்கிறது. அங்கு முதல்வராக சிவராஜ்சிங் சவுகான் உள்ளார். இந்த ஆண்டு இறுதியில் அங்கு சட்டப்பேரவை தேர்தல் நடக்கிறது. தேர்தல் தேதி அறிவிக்கும் முன்னரே பா.ஜ சார்பில் போட்டியிடும் 39 பேர் கொண்ட முதல் பட்டியல் வெளியானது. இந்த நிலையில் கடந்த 18 ஆண்டுகளாக பா.ஜ மத்தியபிரதேச மாநிலத்தில் ரூ.2.70 லட்சம் கோடி ஊழல் செய்துள்ளதாக காங்கிரஸ் கட்சி பட்டியலிட்டுள்ளது. இதுதொடர்பாக மபி காங்கிரஸ் தலைவர் கமல்நாத் கூறியதாவது:

மத்தியப் பிரதேசத்தில் கடந்த 18 ஆண்டுகளில் பாஜ ஆட்சியில் மெகா ஊழல்கள் நடந்துள்ளன. கூகுளில் ‘ஸ்கேம்’ என்று தேடினால், முதல்வர் சிவராஜ் சிங் சவுகான் படம் தான் வரும் அளவுக்கு ஊழல் மலிந்துள்ளது. மத்திய பிரதேசத்தில் உள்ள சிவராஜ் சிங் சவுகான் அரசு, அதன் 18 ஆண்டு கால ஆட்சியில் மோசடிகளில் உலக சாதனை படைத்துள்ளது. பட்டியல் மிக நீளமானது. ஆனால் காங்கிரஸ் கட்சி சில மெகா ஊழல்களைத் தான் பட்டியலிட்டுள்ளது. 50 சதவீத கமிஷன் ராஜ்ஜியம் மாநிலத்தை ‘ஊழல் மாநிலமாக’ மாற்றியுள்ளது. 2018 மற்றும் 2020 க்கு இடையில் எனது ஆட்சி தான் நடந்தது. நான் 2018 மாதிரி இல்லை.

இப்போது நான் 2023 மாடல். 2019 மக்களவை தேர்தலுக்கான மாதிரி நடத்தை விதிகளின் காரணமாக இரண்டரை மாதங்கள் வீணாகிவிட்டது. இருப்பினும் ஊழல் முறைகேடுகளை விசாரிப்பதை விட, மத்திய பிரதேசத்தை முதலீட்டாளர்களின் மையமாக மாற்றுவதில் கவனம் செலுத்தினேன். ஆனால் மபி பா.ஜ ஆட்சியில் பிரபல வியாபம் ஊழல் (ரூ. 2,000 கோடி), சட்டவிரோத சுரங்கம் (ரூ. 50,000 கோடி), இடெண்டர் ஊழல் (ரூ. 3,000 கோடி), ஆர்.டி.ஓ ஊழல் (ரூ. 25,000 கோடி), மதுபான ஊழல் (ரூ. 86,000 கோடி), மகாகல் லோக் (ரூ. 100 கோடி) மின்சார ஊழல் (ரூ. 94,000 கோடி) உள்பட 254 ஊழல்கள் மூலம் ரூ.2.70 லட்சம் கோடி மோசடி நடந்துள்ளது. எதில் எடுத்தாலும் 50 சதவீத கமிஷன் பெற்ற அரசு இது. இவ்வாறு அவர் கூறினார்.

---

## இராயபுரம் கிழக்குப் பகுதி இலக்கிய அணி துணை அமைப்பாளர்

# கே.சிவக்குமார் இல்ல மணவிழா: அமைச்சர் பி.கே.சேகர்பாபு வாழ்த்துகிறார் !

### ஐட்ரீம் ஆர்.மூர்த்தி எம்.எல்.ஏ. முன்னிலை! இரா.செந்தில்குமார் தலைமை!

சென்னை, ஆக. 20 -

இராயபுரம் கிழக்குப் பகுதி இலக்கிய அணி துணை அமைப்பாளர் கே.சிவக்குமார் இல்ல (மணமக்கள் சி. சதீஷ் - இ.வினிதா) திருமண வரவேற்பு நிகழ்ச்சி இன்று (28.8.2023 -ஞாயிறு) மாலை நடைபெறுகிறது.

இராயபுரம் கிழக்குப் பகுதிச் செயாளர் இரா. செந்தில்குமார் தலைமை தாங்கிட, இராயபுரம் சட்ட மன்ற உறுப்பினர் ஐட்ரீம் ஆர். மூர்த்தி முன்னிலை வகித்து வாழ்த்துகிறார்.

இதில் சிறப்பு விருந்தினராக இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, மாவட்டச் செயலாளர் தா.இளைய அருணா, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., கே.பி.சங்கர் எம்.எல்.ஏ., ஜெ.ஜெ.எபினேசர் எம்.எல்.ஏ., முன்னாள் எம்.எல்.ஏ. இரா.மதிவாணன், கே.பி.சொக்க லிங்கம், ஆர். சுரேஷ்குமார், வ.பெ.சுரேஷ், இரா.லட்சும ணன், எஸ். சுரேஷ், காட்டன் சதீஷ், என்.கிருஷ்ணன், ஆறு. கோவிந்தராஜ், பி. கண்ணன், ஆர்.வீ.கணேஷ், கே.கலைசெல்வன், எஸ்.ஏ. ராஜா, எஸ்.சீனிவாசன், தா. ஸ்டீபன், ஆ.மணிவண்ணன், பா. அஜீத், ர.மி, எம். சித்தார்த்தன், ஜி.லோகேஷ், எஸ். செந்தூர பாண்டியன், ஆர். நரேஷ், சுனில், சாலமன், எஸ்.எஸ். சரவணன், ஜி. அருண், என்.ராஜசேகர் மற்றும் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்.

அ.ஞானசேகர், ந. தென்னரசு ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

---

# “மோடி நாடாளுமன்ற பேச்சு: பிரதமர் பதவிக்கு அழகல்ல!”

மணிப்பூர் அவலம் - நெருக்கடி குறித்துப் பேச மறுத்து, நீண்ட நாட்களாக மவுனம் சாதித்து வந்த பிரதமர் மோடி அவர்களை எப்படியாவது நாடாளுமன்றத்திற்கு வர வைத்து, பதிலளித்திடச் செய்ய வேண்டும் என்ற நோக்கில், எதிர்க்கட்சிகள் ஒன்றிய பா.ஜ.க. அரசு மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவந்தன. வேறு வழியின்றி பிரதமர் மோடி அவர்களும் நாடாளுமன்றத்திற்கு வந்து இரண்டரை மணி நேரம், கேலியும் கிண்டலும் கலந்து, ஓரங்க நாடகம் ஒன்றை உற்சாகத்துடன் அரங்கேற்றினார்.

பிரதமர் மோடியின் பதில் உரைக்கு எதிர்க் கட்சியினர் மற்றும் ஏடுகள் தக்கபடி எதிர்வினை ஆற்றின.

**“மோடி நாடாளுமன்றப் பேச்சு: பிரதமர் பதவிக்கு அழகல்ல” என்று, ஆச்சரியமான தலைப்பிட்டு, ‘சிந்தனைக் களம்’ என்ற பகுதியில், விவேகானந்த கேந்திராவின் முழுநேர ஊழியர் ஒருவர் எழுதியுள்ள கட்டுரையை இன்று ( 19.8.2023 ) ‘தினமலர்’ நாளேடு வெளியிட்டுள்ளது.**

**வழக்கமாக, பா.ஜ.க. - அ.தி.மு.க. ஆதரவு நாளேடாகவே வெளிவரும் தினமலர், திடீரென்று இப்படி ஒரு கட்டுரையை வெளியிட்டிருப்பது, பா.ஜ.க. - அ.தி.மு.க.வினர் பலரையும் அதிர்ச்சி அடையச் செய்திருக்கும்!**

தொடர்ந்து பொய்ப் பரப்புரைகளையே செய்து, பொது மக்களைக் குழப்பி, திசைதிருப்பும் சூழ்ச்சிகளை வெகு சாமர்த்தியமாகச் செய்து கொண்டிருக்கும் பா.ஜ.க.வினர்க்கு, தினமலர் கட்டுரையில் உள்ள உண்மைகள் கசப்பானவையாகவே இருக்கும்.

★ **‘காங்கிரஸ் ஆட்சியில் வட கிழக்கு மாநிலங்களில் பிரிவினையைத் தூண்டிவிட்டனர்’ - என்று பிரதமர் மோடி கூறியதில் சிறிதும் உண்மை இல்லை.**

★ **பிரதமராக இருந்த இந்திரா அம்மையார் வட கிழக்கு மாநிலப் பிரச்சினைகளின் வேரைக் கண்டறிந்து, தீர்வுகள் காண அனைத்தையும் செய்தார்.**

★ **அருணாச்சலப் பிரதேசம் உருவாக, தொடக்க நிலைக் காரணமாக இருந்தவர் இந்திரா.**

★ **மன்னராட்சியின் கீழ் இருந்த சிக்கிமை, இந்தியாவுடன் இணைத்தவர் இந்திரா அவர்கள்தான்.**

★ **வட கிழக்கு மாநில மக்கள், தம்மை இந்தியர்கள் என்றழைத்துக் கொள்வதற்கான முயற்சிகள் அனைத்தையும் மேற்கொண்டவர் இந்திரா.**

★ **ஆர்.எஸ்.எஸ். பின்னணி கொண்ட அமைப்பு என்று அறிந்திருந்தும், விவேகானந்த கேந்திரா, வட கிழக்கு மாநிலங்களில் கல்வி - மருத்துவம் தொடர்பான பணிகளை மேற்கொள்ள அனுமதி தந்தவர் இந்திரா.**

★ **நாகாலாந்தை, தனி நாடாக்க முனைந்த தலைமறைவு - பயங்கரவாத இயக்கங்களை ஒடுக்கியவர் இந்திரா.**

★ **இந்திரா அவர்களின் துணிச்சலான நடவடிக்கைகளின் காரணமாகவே, வட கிழக்கு மாநிலங்கள் இன்றும் இந்தியாவுடன் இணைந்திருக்கின்றன.**

★ **வட கிழக்கின் வளர்ச்சி இந்திரா அவர்களின் காலத்திலேயே தொடங்கிவிட்டது.**

★ **குறைந்த பட்சம், பாதிக்கப்பட்ட மணிப்பூர் மக்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறவோ, அங்கு ஜனாதிபதி ஆட்சியை ஏற்படுத்தவோ, பிரதமர் மோடி முன்வரவில்லை.**

மேற்காணும் கருத்துகள் அனைத்தும், மோடி அவர்களுக்கும், பா.ஜ.க.வினர்க்கும் எட்டிக்காய் கசப்புதான். எனினும் உண்மையின் வாயை எத்தனை நாட்களுக்குத்தான் ஊருக்குத் தெரியாமல் கட்டிவைக்க முடியும் ?

**தினமலர் இந்த உண்மைகளை வெளியிட முன்வந்திருப்பது ஆச்சரியம், அதிசயம் !**

●●●